035284

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - பணியிடை காலமான அரசு ஊழியர் திருமதி. R. லில்லிபுஷ்பம் என்பவரது மகன் திரு S. கவின் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை**

அரசாணை (ப) எண். 237

நாள்: 24.11.2022
சுபகிருது ஆண்டு
கார்த்திகை 8 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க. எண்.பமே/எ2/7871/2022, நாள்.22.09.2022.

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட, பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், ஈரோடு மாவட்டம், ஈரோடு அரசு மாணவியர் விடுதியில் காவலர் மற்றும் ஏவலராக பணிபுரிந்தபோது 12.12.2001 அன்று மரணமடைந்த திருமதி. R. லில்லிபுஷ்பம் என்பவரது மகன் திரு S. கவின் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசு விதிகளின்படி தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 07.02.2020 முற்பகல் முதல் நாமக்கல் மாவட்டம், செங்கரை GTR மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு உரிய ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் 07.02.2020 அன்றைய தேதியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, நாமக்கல் மாவட்டம், செங்கரை GTR மேல்நிலைப்

பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திரு.S.கவின் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு தனியரது பணியினை அவர் பணியேற்ற நாளான 07.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அத்துறைகளின் அலுவல் சாரா குறிப்பு எண்.17195/LG1/2022, நாள் 26.10.2022 மற்றும் அலுவல் சாரா குறிப்பு எண். 3415938/G2/2022, நாள்.10/11/2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
திரு.S.கவின்,
த/பெ. திருமதி. R. வில்லிபுஷ்பம் (late),
இளநிலை உதவியாளர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை மாவட்டம் - 600 005.
(பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக)
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை 600 005.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
நாமக்கல் மாவட்டம்.
மாவட்டக் கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008.

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
கூடுதல் தலைமைச் செயலரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

True Copy
1/1/23
தலைமை ஆசிரியர்
ஜி.டி.ஆர். மேல்நிலைப்பள்ளி,
செங்கரை – 637 415,
நாமக்கல் மாவட்டம்.

பிரிவு அலுவலர்.